# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.187/2019 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா– 12 ( PW– 12 ) |
| **பெயர்** | :– | பழனி |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | மாரிமுத்து |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

01–ஆம், 04–ஆம், 05–ஆம், 07–ஆம், 08–ஆம் எதிரிகள் தோன்றினார்கள். 03–ஆம், 05–ஆம் எதிரிகள் தோன்றவில்லை. மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:-**

நான் மேட்டூர், மாதையன்குட்டையில் வசிக்கிறேன். நான் Lorry ஓட்டுநராக பணிபுரிகிறேன். காவேரி Cross அருகில் உள்ள இந்துஸ்தான் தாபா அருகே நான் பஞ்சர் கடை வைத்துள்ளேன். மேற்சொன்ன தாபாவில் ஒருவர் கொலையுண்டதாக கேள்விபட்டேன். நான் அங்கு சென்று பார்க்க-வில்லை. இறந்தவர் யார் என்று எனக்குத் தெரியாது. எதற்காக யார் அவரை வெட்டினார்கள் என்று எனக்குத் தெரியாது. அதுச் சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

கடந்த 19.12.2017-ஆம் தேதியன்று இந்துஸ்தான் தாபாவில் ஒருவரை வெட்டிக் கொன்றுவிட்டார்கள் என்று தகவல் வந்தது. மதியம் 01.30 மணிக்கு நான் அங்கு சென்று பார்த்தேனா என்றால் நான் அங்கு செல்லவில்லை. இந்துஸ்தான் தாபா சமையல் அறை வாசலின் முன்னால் ஒருநபர் கவிழந்த நிலையில் பிணமாக கிடந்தார் என்றும் அவர் தலை, கை, கால், உடலில் வெட்டுக் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார் என்றும் அவரை பற்றி நான் விசாரித்த போது அவர் மேட்டூர் மால்கோ எதிரில் வசிக்கும் அமிர்தராஜ் என்று தெரிந்துக் கொண்டேன் என்றும் மேட்டூரில் வசிக்கும் ஸ்டாலின் ஜெயக்குமாருக்கும் அமிர்தராஜிக்கும் ஒரு வீட்டு நிலம் பிரச்சனையாக கருத்து வேறுபாடு இருந்ததாகவும் அதனால் ஸ்டாலின் ஜெயக்குமார் அமிர்தராஜை வெட்டிவிட்டதாகவும் கேள்விபட்டேன் என்றும் புலனாய்வின்போது

சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.